FMM SRI LANKA
නිදහස් මාධ්‍ය ව්‍යාපාරය
சுதந்திர ஊடக இயக்கம்
Free Media Movement




# 2020

# இலங்கையில் ஊடக சுதந்திரம்

## ஆண்டறிக்கை

சம்பவம் மற்றும் போக்குகள்

# இலங்கையில் ஊடக சுதந்திரம்

2021 மே மாதம் 03

**உலக பத்திரிகை சுதந்திர தினத்தை முன்னிட்டு வெளியிடப்பட்டது**

**சுதந்திர ஊடக இயக்கம்**

FMM SRI LANKA නිදහස් මාධ්‍ය ව්‍යාපාරය சுதந்திர ஊடக இயக்கம் Free Media Movement

## சுதந்திர ஊடக இயக்கம் பதிப்பகத்தில் உள்ள வேறு புத்தகங்கள்

சீதா ரஞ்சனி (2011) கருத்துக் கொலைக்கு இறையானோர்

சுதந்திர ஊடக இயக்கத்தின் 25 ஆவது ஆண்டுவிழாவை முன்னிட்டு வெளியிடப்பட்டது (2017) சுதந்திர ஊடக இயக்கத்திற்கு 25

சுதந்திர ஊடக இயக்கம் (2017) பரந்த ஊடக சீர்திருத்தத்திற்கான செயற்திட்டம்

பேராசிரியர் சுனில் விஜேசிறிவர்தன (2019) கூட்டு புலன் உணர்வின் மாற்றத்திற்கான ஊடகங்களின் வகிபாகம்

சுதந்திர ஊடக இயக்கம் மற்றும் சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம் (இலங்கை கிளை) 2019 நிர்ப்பந்தப் பணி மற்றும் நியாயமான ஆட்சேர்ப்பு பற்றிய அறிக்கையிடல்

சுதந்திர ஊடக இயக்கம் மற்றும் இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர்கள் சங்கம் (2019) இலத்திரனியல் ஊடகத்துறை தொழிலாளர் மதிப்பாய்வு

சுதந்திர ஊடக இயக்கம் (2020) இலத்திரனியல் ஊடகத்துறை தொழிலாளர் மதிப்பாய்வு

## இலங்கையில் ஊடக சுதந்திரம் தொடர்பான வருடாந்த அறிக்கை

© சுதந்திர ஊடக இயக்கம் - 2021 மே மாதம்

1 ஆம் பதிப்பு கொழும்பு

பக்கம் புகைப்பட 36, குறிப்புக்கள் 02, அட்டவணை 03

ISBN 978-624-5909-01-8

இந்த வெளியீட்டிற்கான பதிப்புரிமை சுதந்திர ஊடக இயக்கத்திற்கு உரித்தாகும். இந்த அறிக்கையை முழுமையாக அல்லது பகுதியாக பதிப்பாளரின் எழுத்துபூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னனு அல்லது நகல் எடுப்பது,ஒளிப்பதிவு செய்வது அல்லது எந்த தகவலையும் சேமிப்பு மற்றும் திரும்பப் பெறும் முறையில் பயன்படுத்துவதோ கூடாது.

**ஆராய்ச்சியாளர்:** விரஞ்சன ஹேரத் (சட்ட வழக்கறிஞர்)
கலாநிதி மாணவர்,
தெற்காசிய பல்கலைக்கழகம்,
புது டில்லி, இந்தியா.

**மொழிபெயர்ப்பாளர்:** பாத்திமா ரிக்சா

**முகப்பு அட்டை வடிவமைப்பு மற்றும் பக்க வடிவமைப்பு:** நலிந்த செனவிரத்ன

**அச்சுப்பதிப்பு**
சுதந்திர ஊடக இயக்கம்
இல. 96, பர்னாட் சொய்சா மாவத்தை,
கொழும்பு 5
அலுவலக தொலைபேசி இலக்கம்: 011 236 8895
மின்னஞ்சல்: fmmsrilanka@gmail.com, fmm.mfrm@gmail.com
வலைத்தளம்: www.fmmsrilanla.lk, www.mediareform.lk

# உள்ளடக்கம்


ஊடக சுதந்திர - ஆண்டறிக்கை 2020... 6

1. அறிமுகம் 7
   1.1 ஆராய்ச்சியின் பின்னணி 7
   1.2 நோக்கங்கள் 8
   1.3 ஆய்வு முறை 8
   1.4 நோக்கம் மற்றும் வரையறைகள் 8

2. இலங்கையின் ஊடக சுதந்திரம்- 2020 ஆம் ஆண்டிற்கு முன்னான ஒரு கண்ணோட்டம் 9

3. 2020ல் இலங்கையின் ஊடக சுதந்திர நிலை 12
   3.1 சிந்தனை சுதந்திரம் அல்லது உள்ளுணர்வு சுதந்திரம் 12
   3.2 கருத்து சுதந்திரம் 13
   3.3 பேச்சு சுதந்திரம் 13
   3.4 கருத்து தெரிவிக்கும் சுதந்திரம் 13
   3.5 தகவல் சுதந்திரம் 13
   3.6 தகவல் பதிவு செய்வதற்கான சுதந்திரம் 14
   3.7 வெளியீட்டு அல்லது பத்திரிகை சுதந்திரம் 14
   3.8 பத்திரிகை சுதந்திரம் 14
   3.9 ஒளிபரப்பு சுதந்திரம் 15
   3.10 இணைய சுதந்திரம் 15

4. 2020 ஊடக சுதந்திரத்திற்கு எதிரான பிரிவு வகைகள் மற்றும் செயல்பாடுகள் 17

5. பிற கண்டுபிடிப்புகள் 22

6. முடிவுரை 24

இணைப்பு 27

# ஊடக சுதந்திர - ஆண்டறிக்கை 2020...

சமூக பொறுப்புள்ள சுதந்திர ஊடக கலாசாரத்தை உருவாக்குவதற்காக பல காலம் தொட்டே பல்வேறு பணிகள் மற்றும் செயற்பாடுகளை மேற்கொண்டுவரும் சுதந்திர ஊடக இயக்கம் பரந்த ஜனாநாயக பார்வையுடன் கூடிய ஊடக சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் மற்றும் ஊடகவியலாளர்களின் உரிமைகள் தொடர்பில் கொள்கை மற்றும் செயல்பாட்டு ரீதியாகவும் தமது நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றது. ஊடக சுதந்திர அத்துமீறல் சம்பவங்கள் தொடர்பில் பல்வேறு மட்டங்களில் தலையிட்டு அதற்கேற்றவாறு பணிகளை மேற்கொண்டாலும் வருடாந்திர அடிப்படையில் சீரான முறையில் ஊடக சுதந்திர மீறல்கள் தொடர்பில் தகவல்கள் காணப்படாமையானது இந்த துறையில் நீண்டகாலமாக காணப்பட்ட குறைபாடாகவே இருந்தது. நாட்டிற்குள் நிகழும் ஊடக சுதந்திர மீறல்களை முறையாக மதிப்பிடுவதற்கும் ஆய்வுக்கு உட்படுத்துவதற்குமான வருடாந்த அறிக்கையின் தேவைப்பாட்டை பல தனிநபர்கள் எங்களின் கவனத்திற்கு கொண்டுவந்தமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். சுதந்திர ஊடக இயக்கம் பல காலம் தொட்டே இந்த வருடாந்த அறிக்கையை தொகுக்க முயற்சி செய்து வந்ததுடன்,இறுதியாக 2020 ஆம் ஆண்டு நிகழ்ந்த சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு வருடாந்த அறிக்கையை தொகுக்க வாய்ப்பு கிடைத்தது. அதேநேரத்தில் 2021 ஜனவரி மாதத்தில் இருந்து குறித்த மாதங்களில் நிகழும் சம்பவங்களை அடிப்படையாக கொண்டு மாதாந்த அறிக்கை தொகுப்பதற்கான வாய்ப்பும் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஊடக சுதந்திரம் தொடர்பில் காணப்படும் பத்து உரிமைகள் தலைப்புகளை கருத்தில்கொண்டு தொகுக்கப்பட்டுள்ள இந்த அறிக்கையில் 2020 ஆம் ஆண்டு இலங்கையில் ஊடக சுதந்திரத்தின் நிலை தொடர்பில் சுருக்க ஆய்வொன்றை குறித்த அறிக்கை வழங்குகின்றமை கவனிக்கத்தக்கதாகும். 2021 ஆண்டு மே மாதம் 03 ஆம் திகதி உலக பத்திரிகை சுதந்திர தினத்தை முன்னிட்டு வெளியிட இருந்த குறுகிய காலத்தில் தயாரிக்கப்பட்ட இந்த அறிக்கையானது ஊடக சுதந்திர வருடாந்த அறிக்கை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட முதல் முயற்சி ஆகும். மேலும் இவ்வறிக்கையானது 2020 ஆம் ஆண்டு இலங்கையில் பூரண ஊடக சுதந்திரம் தொடர்பில் மதிப்பீடு செய்யும் அறிக்கையல்ல என்பதனை கருத்தில்கொள்ள வேண்டும். ஊடக துறையை பிரதிநிதிபடுத்தும் பெரும்பாலான பங்காளர்களின் பங்களிப்புடன் எதிர்வரும் அறிக்கைகளை மேலும் தரம் ரீதியாக மேம்படுத்தி இலங்கையில் ஊடக சுதந்திரத்தை மதிப்பீடு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். ஆகவே இந்த அறிக்கை தொடர்பில் உங்கள் கருத்துக்கள் மற்றும் பரிந்துரைகளை எதிர்கால அறிக்கையில் கருத்தில் கொண்டு இந்த அறிக்கையை மேம்படுத்த எண்ணியுள்ளோம்.

அறிக்கை மூன்று மொழிகளிலும் வெளியிடப்பட்டுள்ளது.

சுதந்திர ஊடக இயக்கத்தின் முயற்சியை வெற்றிகொள்ள Open Society Foundation அறக்கட்டளை நிறுவனம் உறுதுணையாக இருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். ஆகவே Open Society Foundation அறக்கட்டளை நிறுவனத்திற்கு முதலில் நன்றியை தெரிவித்துக்கொள்ளுவதுடன் குறுகிய கால வரையறைக்குள் குறித்த ஆய்வை மேற்கொண்ட திரு. விரன்ஜன ஹேரத்தின் முயற்சியை சுதந்திர ஊடக இயக்கம் பெரிதும் பாராட்டுகின்றது. அறிக்கையின் வரைவு நகலை வாசித்து கருத்துக்கள் மற்றும் பரிந்துரைகளின் மூலம் அறிக்கையை மேம்படுத்திய சுதந்திர ஊடக இயக்கத்தின் நிர்வாகக்குழுவினால் நியமிக்கப்பட்ட “ஊடக சுதந்திரம்” துணைக்குழுவின் அங்கத்தவர்களான சீதா ரஞ்சனி,லசந்த டி சில்வா,சி. தொடாவத்த,ஹனா இப்ராஹீம், நிரஞ்சனி ரோலந்த், லக்ஸ்மன் குணசேகர மற்றும் ஆனந்த ஜயசேகர ஆகியோரிற்கும் நன்றியை தெரிவித்துக் கொள்ளுவதுடன் குறித்த அறிக்கை பணிகளை ஒருங்கிணைத்த பணியாளர்களான திரு. பர்னாட் எதிரிசிங்க மற்றும் திரு. இன்பாஸ் இஸ்ஸதீன் ஆகியோருக்கும் சுதந்திர ஊடக இயக்கம் சார்ப்பாக நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்

**சீதா ரஞ்சனி**
அழைப்பாளர்
சுதந்திர ஊடக இயக்கம்

# 1. அறிமுகம்




கவிஞரும் தமிழ் மொழி ஆசிரியருமான அஹ்னாஃப் ஜஸீமை எந்த விதமான குற்றச்சாட்டுகளும் இன்றி ஒருவருடத்திற்கும் அதிகமான காலம் சிறையில் வைக்கப்பட்டுள்ளமை. அஹ்னாஃப் ஜஸீமை தொடர்ந்து தடுப்புக்காவலில் வைத்திருப்பது குறித்து 13 மனித உரிமை அமைப்புகள் தமது கவலையையும் கண்டனத்தையும் தெரிவித்துள்ளன. www.theleader.lk

ஊடக சுதந்திரம் என்பது ஒரு நாட்டின் ஜனநாயகத்துடன் நெருங்கிய தொடர்பை கொண்டதாகும். மேலும், ஊடக சுதந்திரம் நிலவும் நாடுகளில் பொதுவாக அரசியல் ஸ்திரத்தன்மை, சட்டவாட்சி, கொள்கை செயல்பாட்டில் அரசாங்கத்தின் செயல்திறன், சட்ட கட்டமைப்பு மற்றும் ஒருங்கமைப்பு தரம் மற்றும் குறைந்தபட்ச ஊழலை கொண்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.[1] யுனெஸ்கோவின் கூற்றுப்படி, ஊடக சுதந்திரம் எனப்படுவது ஜனநாயகம், அபிவிருத்தி மற்றும் உரையாடல்களின் ஒரு முக்கியமான அடித்தளமாகும், மேலும் ஊடக சுதந்திரமானது மற்ற அனைத்து மனித உரிமைகளை பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் ஒரு முன் நிபந்தனையாக திகழ்கிறது.[2] எனவே, ஒரு நாட்டின் ஊடக சுதந்திரத்தின் நிலைமையானது ஜனநாயகத்தின் நிலைப்பாடு பற்றிய தெளிவான காட்சியை வெளிக்காட்டுவதாக உள்ளது.

## 1.1 ஆராய்ச்சியின் பின்னணி

இந்தப் பின்னணியில், 2020 ஆம் ஆண்டிற்கான இலங்கையின் ஊடக சுதந்திரம் குறித்த இந்த ஆய்வறிக்கையானது, நாட்டின் ஊடக சுதந்திரத்தின் மற்றும் ஜனநாயகத்தின் நிலைமைகளை வெளிக்காட்டுகின்றது.

குறித்த அறிக்கையானது,ஊடக சுதந்திரத்திற்கு எதிரான சவால்கள், அச்சுறுத்தல்களை உள்ளடக்கியுள்ளது. இருப்பினும்,2020ஆம் ஆண்டிற்கான ஊடக சுதந்திரத்தின் நிலையை தனியே பகுப்பாய்வு செய்யாமல், வரலாற்று அபிவிருத்தி, ஊடக சுதந்திரத்தை பாதிக்கும் காரணிகள், சம்பவங்களின் உதவியுடனேயே மேற்கொள்ள வேண்டியுள்ளது ஏனெனில் ஊடக சுதந்திரத்தின் நிலையை சுயாதீன காரணியாக கொண்டு பகுப்பாய்வு செய்ய முடியாது. ஊடக சுதந்திரம் ஆனது பல்வேறு காரணிகளின் சேர்கை என்பதினாலாகும். அதன்படி, இலங்கையின் ஊடக சுதந்திரம்- 2020 ஆய்வு அறிக்கை "என்பது ஊடக சுதந்திரத்தின் தற்போதைய நிலையை ஆராயும் ஒரு முயற்சி என்பதுடன், இவ்வாய்வு

ஆனது இலங்கையின் ஜனநாயக செயன்முறை அல்லது நடைமுறையை மதிப்பீடு செய்யும் ஒரு செயல்பாடாகவும் காணப்படுகின்றது.ஆகவே இந்த ஆய்வானது எதிர்காலத்தில் ஊடக சுதந்திரம் தொடர்பில் மதிப்பீட்டை செய்வதற்கான சில வழிகாட்டுதல்களையும் வழங்குகின்றமை கவனிக்கத்தக்கதாகும்.

எந்தவொரு சட்ட அதிகார வரையறைக்குள்ளும் "ஊடக சுதந்திரம்" தொடர்பாக ஆய்வு செய்யும்போது தெளிவற்ற அல்லது கருத்து வேறுபாடு கொண்ட விதிமுறைகள் மற்றும் ஒருமித்த கருத்துக்கள் காணப்பட முடியும். உதாரணமாக ஊடக சுதந்திரம் என்பதற்கு துல்லியமான அல்லது பொறுத்தமான வரைவிலக்கணம் இல்லை. பிரிட்டானிக்கா கலைக்களஞ்சியத்தின் வரைவிலக்கணப்படி, ஊடக சுதந்திரம் என்பது அரசியல் மற்றும் சிவில் சமூகத்தில் செயல்பட பலவிதமான ஊடகங்கள் மற்றும் தகவல் தொடர்பு மூலாதாரங்களின் சுதந்திரமாகும்.குறித்த வரைவிலக்கணமானது பத்திரிகை சுதந்திரம் குறித்த சம்பிரதாய கருத்தை வானொலி, தொலைக்காட்சி மற்றும் இணையம் போன்ற மின்னணு ஊடகங்களுக்கும் விரிவுபடுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்[3] யுனெஸ்கோ குறிப்பிடும் விடயமாவது , "வார்த்தை மற்றும் உருவம் அல்லது புகைப்படம் மூலம் கருத்துக்களின் சுதந்திர ஓட்டத்தை ஊக்குவிப்பது" என்பது ஊடக சுதந்திரத்தின் முதுகெலும்பாகும்.[4] அதன்படி, ஊடக சுதந்திரம், ஊடகம் மற்றும் ஊடகவியலாளர்கள் என்ற சில வரைவிலக்கணங்களை இந்த ஆய்வு ஏற்றுக்கொள்ளுவதுடன் ஆய்வு நடவடிக்கைக்கு குறித்த வரைவிலக்கணங்களை பயன்படுத்தியமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

"ஊடக சுதந்திரம்" என்ற சொல்லுக்கு உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட வரைவிலக்கணம் இல்லை என்ற போதிலும், ஊடக சுதந்திர பகுதி கூறுகள் குறித்து பரவலாக அங்கீகரிக்கப்பட்ட ஒருமித்த வரைவிலக்கணங்கள் அல்லது கருத்துக்கள் உள்ளமை கவனிக்கத்தக்கதாகும்.கருத்து சுதந்திரம் என்பது ஊடக சுதந்திரத்தின் முதுகெலும்பாக காணப்படுகின்றது.இருப்பினும், ஊடக சுதந்திரமானது பல கூறுகளை உள்ளடக்கியது: தகவல் சுதந்திரம், கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் அல்லது பேச்சுரிமை.[5] முக்கியமாக, ஊடக சுதந்திரமானது சிந்தனை சுதந்திரம், கருத்துச் சுதந்திரம்,கருத்து தெரிவிக்கும் சுதந்திரம்,பேச்சு சுதந்திரம், தகவல் சுதந்திரம், வெளியீட்டு அல்லது பதிப்பு சுதந்திரம், தகவல் பதிவு செய்யும் சுதந்திரம் (உரை, புகைப்படங்கள், ஆடியோ மற்றும் வீடியோக்கள்),பத்திரிகை சுதந்திரம் , ஒளிபரப்பு சுதந்திரம் மற்றும் இணைய சுதந்திரம்போன்ற பத்து சுதந்திரக் பகுதி கூறுகளை உள்ளடக்கியுள்ளது.[6] எனவே மேலே குறிப்பிட்ட ஊடக சுதந்திரத்தின் பகுதி கூறான பத்து சுதந்திரங்களின் ஒருங்கிணைப்பை குறித்த ஆய்வு நடவடிக்கையின் போது அடிப்படையாக கொண்டு செயற்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

தற்போதுள்ள டிஜிட்டல் மயமாக்கப்பட்ட உலகில் "ஊடகம்" என்ற சொல்லுக்கான வரைவிலக்கணம் சிக்கலானதாகும்.2000 ஆம் ஆண்டு வரை, "ஊடகம்" பொதுவாக நான்கு முக்கிய ஊடகத் தொழில்களைக் கொண்டிருந்தது: அச்சு, ஒளிபரப்பு, இசை மற்றும் சினிமா.தொழில்நுட்பத்தின் விரைவான மாற்றங்கள் காரணமாக (முக்கியமாக இணையத்தின் வளர்ச்சி), அனைத்து தொழில் அம்சங்களும் ஒரு புதிய கட்டமைப்புக்குள் உட்படுத்தப்படுகின்றன.சமூக ஊடகங்கள் மற்றும் இணைய ஊடகங்கள் போன்ற பல்வேறு புதிய தளங்களை "ஊடகம்" வரைவிலக்கணம் உள்ளடக்கியுள்ளமை கவனிக்கத்தக்கதாகும்.[7] எனவே,பாரம்பரிய ஊடகங்கள் மற்றும் புதிய ஊடகங்கள் உட்பட அனைத்து வகையான ஊடகங்களின் சுதந்திரத்தையும் குறித்த ஆய்வு அறிக்கையானது ஆராய்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

அதைத் தொடர்ந்து, "ஊடகவியலாளர்" என்ற சொல்லுக்கு வரைவிலக்கணம் அளிப்பது மற்றும் ஊடகவியலாளர்களை அடையாளம் காண்பது பிரச்சினை குரியதாகிவிட்டது.முன்னதாக, பாரம்பரிய ஊடகங்களின் எல்லைகள் மற்றும் வரையறைகள் குறைவாக இருப்பதால் ஊடகவியலாளர்களை அடையாளம் காண்பது எளிதாக இருந்தது.இருப்பினும், வலைதள பதிவாளர்கள், குடிமகன் அல்லது பிரஜைகள்,ஊடகவியலாளர்கள் மற்றும் யூடியூப் வீடியோ தயாரிப்பாளர்கள் போன்றவர்களை ஊடகவியலாளர்களாக வளர்ந்து வரும் டிஜிட்டல் மற்றும் சமூக ஊடகப் பாத்திரமாக கருதப்பட வேண்டும்.எனவே, ஊடகவியலாளர்களை அடையாளம் காண்பதற்காக சமகால சூழ்நிலையில் அவர்களின் நிறுவன உறவை விட ஊடக மக்களின் குறிக்கோள்கள், தந்திரோபாயங்கள் மற்றும் மதிப்புகளை ஆராய்வது உகந்த முறையாகும்.[8] குறித்த ஆய்வானது செய்தித்தாள், வானொலி மற்றும் தொலைக்காட்சி மற்றும் பிளாக்கர் பதிவர்கள், குடிமகன் அல்லது பிரஜைகள் ஊடகவியலாளர்கள் மற்றும் பாரம்பரிய பத்திரிகையாளர்கள் மற்றும் வேறுபட்ட கருத்தை கொண்டஇணைய பயனாளிகள் போன்றோர் ஊடகவியலாளர்கள் என்ற வரைவிலக்கணத்தின் கீழ் அடையாளம்காணப்பட்டுள்ளனர்.

மேலும்,அரச அல்லது தனியார் தரப்புகளினால் மேற்கொள்ளப்படும் ஊடக சுதந்திரத்திற்கு எதிரான எந்த வகையான அச்சுறுத்தல், சவாலும்குறித்த ஆய்வில் உள்ளடக்கப்பட்டுள்ளமை கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது.ஊடக சுதந்திரம் மற்றும் ஊடக உரிமை மீறல் என்பது வெறுமனே அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கையாக கருத்தில் கொள்ள முடியாது என்பதுடன்,தனியார்துறை நிறுவனங்கள் உட்பட பெரிய நிறுவனங்கள்,சிவில் குழுக்கள் மற்றும் இனத்தீவிரவாத கருத்தை கொண்டவர்கள் ஊடக சுதந்திரத்திற்கு எதிராக தீவிரமாக ஈடுபடுகின்றமை கவனிக்கத்தக்கதாகும். ஆகவே,இலங்கையின் ஊடக சுதந்திரத்திற்கு எதிராகமேற்கொள்ளப்படும் எந்தவொரு தரப்பினரும் முன்வைக்கும் பல்வேறுபட்ட

அச்சுறுத்தல்கள் குறித்து இந்த ஆய்வு ஆராய்ந்துள்ளமை கவனிக்கத்தக்கதாகும்.

## 1.2 நோக்கங்கள்

- 2020 ஆம் ஆண்டில் இலங்கையின் ஊடக சுதந்திரத்தின் நிலையை ஆராய்தல்.
- இலங்கை சூழலில் ஊடக சுதந்திரத்திற்கும் ஜனநாயகத்திற்கும் இடையில் காணப்படும் தொடர்பை அடையாளம் காணுதல்.
- நாட்டின் ஊடக சுதந்திரத்திற்கு எதிரான செயற்பாடுகள் மற்றும் தரப்பினர்களை கண்டறிதல் மற்றும் அவற்றின் தாக்கத்தை மதிப்பிடுதல்.
- இலங்கையின் ஊடக சுதந்திர உரிமை மீறல்களை அடையாளம் காண பயன்படுத்தப்படும் குறிகாட்டிகளை அல்லது சுட்டெண்களை மதிப்பீடு செய்தல்.
- ஊடக சுதந்திரத்திற்கு எதிரான அனைத்து விதமான செயல்கள் மற்றும் நடவடிக்கைகளை கண்டறிய மிகவும் பொருத்தமான மற்றும் பயனுள்ள குறிகாட்டிகள் அல்லது சுட்டெண்ணை அடையாளம் காணுதல்.

## 1.3 ஆய்வு முறை

குறித்த ஆய்வானது கோட்பாடு மற்றும் அனுபவ நடைமுறைகள் இரண்டையும் உள்ளடக்கிய ஒரு கலப்பு ஆய்வு முறையைப் பின்பற்றுகிறமை குறிப்பிடத்தக்கதாகும்.ஒரு கோட்பாடு தலைப்பில் ஆவணங்கள், அறிக்கைகள் மற்றும் கட்டுரைகளை மதிப்பாய்வு செய்வது உள்ளடங்கும். அனுபவ நடைமுறை நுட்பங்களில் நேர்காணல்கள் மற்றும் பங்கேற்பு அவதானிப்புகள் உள்ளடங்கும்.முதலாம் மற்றும் இரண்டாம் நிலை தரவுகள் குறித்த ஆராய்ச்சியின் போது சேகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். கையேடு முறைகள் மற்றும் மைக்ரோசாப்ட் வேர்ட் மென்பொருள் கருவிகளும் பகுப்பாய்வு நடவடிக்கைக்கு பயன்படுத்தப்பட்டன.

## 1.4 நோக்கம் மற்றும் வரையறைகள்

ஆராய்ச்சியானது குறுகிய காலத்திற்குள் (துல்லியமாக மூன்று மாதங்களுக்குள்) மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். COVID-19 தொற்றுநோயால் நகர்விற்கான வரையறைகள் காரணமாக ஆராய்ச்சியின் அனுபவ நடைமுறை பணிகளை மேற்கொள்ள பல சிக்கல்களை முகம்கொடுக்க நேரிட்டது. இருப்பினும், மெய்நிகர் இடம்(இணையவழி வாய்ப்பு)குறித்த இடைவெளியை ஓரளவிற்கு குறைத்துக்கொள்ள உதவியமை குறிப்பிடத்தக்கதாகும்.

# 2. இலங்கையின் ஊடக சுதந்திரம்- 2020 ஆம் ஆண்டிற்கு முன்னான ஒரு கண்ணோட்டம்




மட்டக்களப்பில் படுகொலைசெய்யப்பட்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் மற்றும் இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் உப தலைவராக கடமைபுரிந்த ஐயாத்துரை நடேசனின் 16ஆவது நினைவுதினம். யாழ் ஊடக மன்றத்தினால் மே மாதம் 31 ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்டது. குறித்த நிகழ்வில் ஈகைச் சுடர் ஏற்றப்பட்ட புகைப்பட காட்சியே இது. மேலும் இந் நிகழ்வில் 14 பாதுகாப்பு அதிகாரிகள் கடமையில் இருந்தனர். www.theleader.lk

ஊடக சுதந்திரத்தின் பல பகுதி கூறுகளை இலங்கை அங்கீகரித்துள்ளமை அவதானிக்கத் தக்கதாகும். உதாரணமாக, பேச்சு மற்றும் கருத்துச் சுதந்திரம் நாட்டில் ஒரு அடிப்படை உரிமை ஆகும்.[9] மேலும், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை அரசாங்கம் இயற்றியுள்ளமை.[10] தவிர, இலங்கையில் பிரதான நீதிமன்றங்கள் ஊடக சுதந்திரக் கோட்பாட்டை அல்லது கொள்கையை வளர்க்கும் முக்கிய தீர்ப்புகளை வழங்கியுள்ளன.[11]

இருப்பினும், இலங்கையின் ஊடக சுதந்திரம் தொடர்பான பிரச்சினைகள் குறிப்பிடத்தக்க அளவு பதிவாகியுள்ளமை கவனிக்கத்தக்கதாகும்.உதாரணமாக, 1981 முதல் 2009 வரை 116 ஊடக துறைசார்ந்த தனிநபர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்கள் மற்றும் கலாச்சார ஆர்வலர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.[12] மேலும், 2010-2014 முதல் 40 க்கும் மேற்பட்ட ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகத்தறை சார்ந்த உத்தியோகத்தர்கள் கொல்லப்பட்டனர் அல்லது காணாமல் போயுள்ளனர்.[13] அதுதவிர, கடத்தல்கள், தாக்குதல்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் ஊடகவியலாளர்களுக்கு எதிராக மட்டுமின்றி, ஊடக நிறுவனங்களுக்கு எதிராகவும் நிகழ்ந்துள்ளமை கவனிக்கத்தக்கதாகும்.[14] மேலும், ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களுக்கு தண்டனை விலக்களித்தல், ஊடகங்களை அடக்குவதை நியாயப்படுத்துதல் மற்றும் இணைய முடக்கம் ஆகியவை ஊடக சுதந்திரக் கோட்பாட்டில் அல்லது கொள்கையில் முக்கியமான பிரச்சினைகளாக மாறியுள்ளமை கவனிக்கத்தக்கதாகும்.2000 முதல் 2019 வரை இலங்கையில் ஊடக சுதந்திரப் பிரச்சினைகளை ஆராய்ந்தபோது, 13 பிரிவுகளைஆய்வாளர் பின்வருமாறு அடையாளப்படுத்தியுள்ளார்.

## அட்டவணை 01-ஊடக சுதந்திர சிக்கல்கள்: சம்பவங்களின் அல்லது நிகழ்வுகளின் சுருக்கம் 2000-2019

| பிரிவுகள் | எடுத்துக்காட்டுகள் அல்லது உதாரணங்கள் |
| --- | --- |
| கொலை மற்றும் காணாமல் ஆக்கபடுதல் | எம். நிமலராஜன் - கொல்லப்பட்டார் - 19/10/2000,<br>தர்மரத்னம் சிவராம் - கொல்லப்பட்டார் - 28/04/2005,<br>ரேலங்கி செல்வராஜா - கொல்லப்பட்டார் - 12/08/2005,<br>லசந்த விக்ரமதுங்க - கொல்லப்பட்டார் - 08/01/2009,<br>எஸ்.ராமச்சந்திரன் - காணாமல் ஆக்கப்பட்டார் - 15/02/2007,<br>பிரகித் ஏக்னலிகொட - காணாமல் ஆக்கப்பட்டார் - 24/01/2010 |
| தாக்குதல்கள் மற்றும் கடத்தல்கள் | கீத் நொயார் - கடத்தப்பட்டு தாக்கப்பட்டார் - 22/05/2008,<br>உபாலி தென்னகோன் - தாக்கப்பட்டார் - 23/01/2009,<br>என். வித்யாதரன்-கடத்தப்பட்டு தாக்கப்பட்டார் - 26/02/2009,<br>போத்தல ஜயந்த - கடத்தப்பட்டு தாக்கப்பட்டார் - 01/06/2009 |
| அச்சுறுத்தல்கள் | மந்தனா இஸ்மாயில் - 23/08/201,<br>கே.பிரசன்னா - 12/08/2019 |
| தடை மற்றும் மிரட்டல்கள் | எம் என் அமினுல்லா – தடைவிதிக்கப்படல் - 21/07/19,<br>பாராளுமன்றத் தேர்வுக் குழுவின் நேரடி நடவடிக்கைகள் தற்காலிக நடவடிக்கைகள் - தடைசெய்யப்பட்டது - 04/06/19 |
| ஊடக நிலையங்கள் மீதான தாக்குதல்கள் | சுடர் ஒளி செய்தித்தாள் அலுவலகம் - வெடிகுண்டு தாக்குதல்-29/08/2005,<br>சிரச வளாகம் - தாக்கப்பட்டது - 06/01/2009,<br>சியத ஊடக நிலையம்-தாக்குதல் - 30/07/2010,<br>லங்கா இ-நியூஸ் - தடைசெய்யப்பட்டமை - 01/02/2011,<br>உதயன் செய்திப்பத்திரிகை அலுவலகம்- தாக்கப்பட்டது - 13/04/2013 |
| சமூக ஊடகங்கள் மற்றும் வலைத்தளங்களை முடக்குதல் | ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலுக்குப் பிறகு சமூக ஊடகங்களுக்கான அணுகல் தடைசெய்யப்பட்டமை, நவம்பர் 10, 2017 இல் லங்காஈநியூஸ் வலைத்தளத்தை முடக்கியமை |
| இணையம் மூடப்பட்டது | நாட்டின் சில பகுதிகளில் மார்ச் 07 2018 அன்று இணைய முடக்கம். |
| சட்ட சிக்கல்கள் அல்லது பிரச்சினைகள் (புதிய சட்டங்களை அறிமுகப்படுத்துதல் அல்லது ஊடக உரிமைகளை மோசமாக பாதிக்கும் சட்டங்களை சீர்திருத்த முயற்சி எடுத்தல்) | 1980 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க தன்னார்வ சமூக சேவை சட்டத்தை மார்ச் 2018 இல் திருத்துவதற்கான அரச முயற்சி. |
| நிர்வாக முடிவுகள்(ஊடக சுதந்திரத்திற்கு எதிராக ஜனாதிபதி மற்றும் அமைச்சர்கள் உள்ளிட்ட நிர்வாகிகள் எடுத்த தீர்மானங்கள்) | இலங்கை ரூபாவாஹினி நிறுவனத்தின் கட்டுப்பாடு மற்றும் முகாமையை பாதுகாப்பு அமைச்சின்கீழ் கொண்டுவருவதற்காக2019 செப்டம்பர் மாதத்தில் ஜனாதிபதியின் தீர்மானம் |
| காவல்துறையின் தவறான நடத்தை (அலட்சியம், ஊடகங்கள் மற்றும் பத்திரிகையாளர்களுக்கு எதிரான சட்டங்களை தவறாக பயன்படுத்துதல்) | 2019 ஜூன் மாதம் சட்டத்தை தவறாகப் பயன்படுத்தி ஊடகவியலாளரான குசல் பெரேரா மீது காவல்துறையினர் நடவடிக்கை எடுக்க முயன்றனர். |
| தண்டனை விதிவிலக்கு (ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களுக்கு நீதி தாமதமாதல்) | சுதந்திர ஊடக இயக்கம் ஊடகவியலாளர்களுக்கு எதிராக 30 வகையான பெரிய குற்றங்களை அடையாளம் கண்டுள்ளது இருப்பினும்,இன்றுவரைஎந்த நீதியும் வழங்கப்படவில்லை.[15] |

| பிரிவுகள் | எடுத்துக்காட்டுகள் அல்லது உதாரணங்கள் |
|---|---|
| ஊடக தொழிலாளர்களின் உரிமைகள் (ஊடகவியலாளர்கள் உட்பட ஊடக ஊழியர்களின் அனைத்து தொழில்முறை மற்றும் தொழிலாளர் உரிமைகளையும் மீறுதல்) | சுவர்ணவாஹினி தொலைக்காட்சி நிலையத்தின் நிர்வாகி, மார்ச் 2019 இல் தொழிற்சங்கத்தை நிறுவியமை காரணமாக 15 ஊடக ஊழியர்களை பணிநீக்கம் செய்தார். |
| தணிக்கை (சட்டம் மற்றும் தனியார் குழுக்களால் உருவாக்கப்பட்டது) | "புதுங்கே ரஸ்தியாதுவ" என்று பெயரிடப்பட்ட புத்தகம், ஆகஸ்ட் 2018 ஆண்டு அதிகாரப்பூர்வமற்ற புத்த தீவிர குழுக்களால் தணிக்கை நடவடிக்கைக்கு உள்ளானது. |

மேலே குறிப்பிட்ட காரணங்களால், சர்வதேச ஊடக சுதந்திர சுட்டெண் தரப்படுத்தலின் இலங்கை பல ஆண்டுகளாக மிகக் குறைந்ததரத்திலேயேஇடம் பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். ப்ரீடம் ஹவுஸ் இலங்கையை அவர்களின் ஊடக சுதந்திர தரப்படுத்தலில் "சுதந்திரம் அல்லாத பிராந்தியம்" என்று தரப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்,[16] மேலும், 2013 ஆண்டின், எல்லைகள் இல்லாத நிருபர்கள் "RSF" சர்வதேசஅமைப்பின் தரப்படுத்தலுக்கு அமைய180 நாடுகளில் இலங்கையானது ஊடக சுதந்திர தரப்படுத்தலில் 126 இடத்தை பிடித்துள்ளமைகுறிப்பிடத்தக்கதாகும்.[17]


நாட்டினுள் ஊடக சுதந்திரம் வலுவான நிலையில் இல்லை என்ற போதிலும், சுமார் 10,000 பேர் பல்வேறு திறன்களில் வெவ்வேறு பிரவேசத்தின் மூலம் ஊடகவியல் சார்ந்த தொழில்வாய்ப்புகளில் ஈடுபடுகின்றனர்.[18] 2019 ஆம் ஆண்டு இறுதியில் 35 செய்திபத்திரிகைகள், 24 தொலைக்காட்சி அலைவரிசைகள் மற்றும் 58 வானொலி நிலையங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளமை கவனிக்கத்தக்கதாகும்.[19] மேலும், செய்தி வலைத்தளங்கள், பேஸ்புக் பக்கங்கள், யூடியூப் சேனல்கள் மற்றும் வலையமைப்பு ரீதியான பாரம்பரிய ஊடகங்கள் போன்ற டிஜிட்டல் மீடியா தளங்கள் ஒரு குறிப்பிடத்தக்க ஊடக வகையாக மாறியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.ஆய்வின் படி, இளம் வயது ஊடக துறைசார்ந்த நபர்கள் இலத்திரனியல் அல்லது டிஜிட்டல் ஊடக தளங்களுடன் குறிப்பிடத்தக்க அளவு ஈடுபட்டுள்ளமை தெளிவாகின்றது.[20]

ஊடக சுதந்திரம், ஊடக உரிமைகள் மற்றும் இதுபோன்ற கருப்பொருள்களுக்காக செயற்படும் பல ஊடக அமைப்புக்களை இலங்கையில்அடையாளம் காண முடியுமாக உள்ளது .சுதந்திர ஊடக இயக்கம் (FMM), இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர்கள் சங்கம் (SLWJA) மற்றும் ஊடக தொழிலாளர் தொழிற்சங்க சம்மேளனம் (FMETU) ஆகியவை இலங்கையில் IFJ இன் இணை நிறுவனங்களாக செயல்படுகின்றமை கவனிக்கத்தக்கதாகும். மேலே குறிப்பிடப்பட்ட அமைப்புகளுக்கு மேலதிகமாக, இளம் பத்திரிகையாளர்கள் சங்கம் (YJA), இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம், மற்றும் தெற்காசியப் பெண்களுக்கான ஊடக அமைப்பு போன்ற அமைப்புக்கள் ஊடக உரிமைகளுக்காக பல விதத்திலும் செயல்படுவதுடன் விசேடமாக இளைஞர்கள், தமிழ், முஸ்லீம் மற்றும் பெண்கள் தொடர்பில் பணியாற்றுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.இலத்திரனியல் ஊடக வளர்ச்சியின் விளைவாக,ஊடக சுதந்திரம் மற்றும் ஊடக உரிமைகள் தொடர்பில் சில புதிய தளங்கள்,கட்டமைப்புகள் மற்றும் அமைப்புகள் உருவாகியுள்ளமை கவனிக்கத்தக்கதாகும் உதாரணமாக நிபுணத்துவ வலைதத்தள

ஊடகவியலாளர் சங்கம். மேலும் யாழ் ஊடக அமையம்,வவுனியா ஊடக அமையம் மற்றும் மாத்தறை பிராந்திய ஊடக அமையம் போன்ற பல ஊடக நிறுவனங்களாகும்

**உதாரணமாக, 1981 முதல் 2009 வரை 116 ஊடக துறைசார்ந்த தனிநபர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்கள் மற்றும் கலாச்சார ஆர்வலர்கள் படுகொலை செய்யப்பட்டனர். மேலும், 2010-2014 முதல் 40 க்கும் மேற்பட்ட ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகத்துறை சார்ந்த உத்தியோகத்தர்கள் கொல்லப்பட்டனர் அல்லது காணாமல் போயுள்ளனர். அதுதவிர, கடத்தல்கள், தாக்குதல்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் ஊடகவியலாளர்களுக்கு எதிராக மட்டுமின்றி, ஊடக நிறுவனங்களுக்கு எதிராகவும் நிகழ்ந்துள்ளமை கவனிக்கத்தக்கதாகும். மேலும், ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களுக்கு தண்டனை விலக்களித்தல், ஊடகங்களை அடக்குவதை நியாயப்படுத்துதல் மற்றும் இணைய முடக்கம் ஆகியவை ஊடக சுதந்திரக் கோட்பாட்டில் அல்லது கொள்கையில் முக்கியமான பிரச்சினைகளாக மாறியுள்ளமை கவனிக்கத்தக்கதாகும்.**

# ૩. 2020ல் இலங்கையின் ஊடக சுதந்திர நிலை



காவல்துறை அதிகாரி நியோமல் ரங்கஜீவ அறிக்கையிடலில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் ஊடகவியலளாரின் பணிக்கு இடையூறு மற்றும் அச்சுறுத்தல் விடுக்கும் காட்சி. புகைப்பட ஊடகவியலாளர் அகில ஜயவர்தன கொழும்பு உயர் நீதிமன்ற வளாகத்தில். நீதிமன்ற இலக்கம் 1.
srilankatwo.wordpress.com

மேலே குறிப்பிட்டுள்ளபடி, ஊடக சுதந்திரம் ஆனது பத்து வகையான சுதந்திரங்களைக் கொண்டுள்ளது.இன்னும் தெளிவாக கூறுவதாயின், இந்த பத்து சுதந்திரங்களும் ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக சுதந்திரத்தை அனுபவிக்கும் மக்கள்அனுபவிக்க வேண்டிய சுதந்திரங்கள் ஆகும். குறித்த பத்து சுதந்திரத்தின் ஏதாவது ஒரு சுதந்திரம் பாதிக்கப்படுமாயின் மீதி ஊடக சுதந்திரங்கள் மிக மோசமான முறையில் பாதிக்கப்படும்.பத்து சுதந்திரங்களும் ஒன்றோடொன்று தொடர்புடையவைஆகவே, அவற்றை வெவ்வேறுகாரணிகளாக கொண்டு தனி பகுதிகளாக பகுப்பாய்வு செய்வது எளிதான காரியம் அல்ல என்பது கவனிக்கத்தக்கதாகும்.இருப்பினும், குறித்த சுதந்திரங்கள் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையதாக இருந்தாலும் கூட, இலங்கையில் ஊடக சுதந்திரத்தின் தெளிவான படத்தை அடையாளம் காண்பதற்கு குறித்த சுதந்திரங்களை தனித்தனியாகவும் பகுப்பாய்வு செய்வது இன்றியமையாததாகும்.ஆயினும் சில சம்பவங்கள் மற்றும் நிகழ்வுகள் ஒன்றோடொன்று பின்னி பிணைந்து காணப்படுவது தவிர்க்கமுடியாத காரணியாகும்

## ૩.1 சிந்தனை சுதந்திரம் அல்லது உள்ளுணர்வு சுதந்திரம்

"சிந்தனை சுதந்திரம்" எனப்படுவது எவ்வித கட்டுப்பாடுகளும் இல்லாமல் தடைகளுக்கு ஆளாகாமல், சுயாதீனமாக சிந்திக்கும் அல்லது எண்ணும் சுதந்திரமே சிந்தனை சுதந்திரம் ஆகும். குறித்த சுதந்திரமே அனைத்து மனித உரிமைகளின் அடிப்படை மற்றும் மூலமாகவும் கருதப்படுகின்றது.மேலும், குறித்த சுதந்திரங்களானது அடிப்படை மனித உரிமைகளாக பல சர்வதேச, பிராந்திய மற்றும் உள்நாட்டு மனித உரிமை செய்முறைகள் ,வழிமுறைகள் மற்றும் அமைப்புக்கள் அங்கீகரித்துள்ளமை கவனிக்கத்தக்கதாகும்.[21] இலங்கை அரசியலமைப்பில் குறித்த சுதந்திரங்களை அடிப்படை உரிமைகளாக அங்கீகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.[22]

2020 ஆம் ஆண்டில் சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்த ஒரு ஊடகவியலாளர் மீது வெறுப்பு பிரசாரத்தை இலக்காகக் கொண்ட ஒரு சம்பவம் நிகழ்ந்தது.[23] மேலும், சிறுபான்மை சமூகத்தை சேர்ந்த ஊடகவியலாளர்களை அடிப்படையாக கொண்டு நடந்தேறிய பல நிகழ்வுகள் மற்றும் சம்பவங்களை குறித்த ஆய்வை மேற்கொண்ட ஆய்வாளர் கவனத்தில் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். முக்கியமாக, இத்தகைய வெறுக்கத்தக்க செயல்கள் தீவிர குழுக்களால்மற்றும் அதிகாரத்தினால் ஏற்பாடு செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும், மேலும் இதுபோன்ற செயல்களை எதிர்ப்பதற்கு அரச அதிகாரிகள் எந்த விதமான நடவடிக்கைகளிலும் ஈடுபடுவதில்லை என்பதும் கவனிக்கத்தக்கதாகும்.சிறுபான்மை சமூகத்தில்

உறுப்பினராக இருப்பதை அடிப்படையாகக் கொண்டு ஊடகவியலாளர்கள் தாக்கப்படுதல் அல்லது வேறுபாடு காட்டப்படுதலானது தெளிவான சிந்தனை சுதந்திரத்தை மீறும் செயற்பாடாகும். இவ்வகையான செயற்பாடுகளானது தனிமனித சிந்தனை சுதந்திரத்தையும் மோசமாக பாதிக்கும் காரணியாகும்.

## 3.2 கருத்து சுதந்திரம்

ஐ.சி.சி.பி.ஆர் சட்டத்தின் படி, அனைவருக்கும் எந்த இடையூறுகளுமின்றி கருத்துக்களை கொண்டிருக்கக்கூடிய உரிமை இருக்க வேண்டும்.[24] அரசாங்கம், சமூக குழுக்கள் அல்லது ஊடக உரிமையாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் உட்பட அனைத்துதரப்பினரும் எவ்வித தடைகளும் இல்லாமல் தங்கள் சொந்த கருத்தை கொண்டிருக்கக் கூடிய உரிமை உண்டு. இலங்கை சூழலில், அரசியலமைப்பின் 10 மற்றும் 14 வது பிரிவில் உரிமை தொடர்பில் விவரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.[25]

2020 ஆம் ஆண்டில், பல சம்பவங்கள் ஊடகவியலாளர்களின் கருத்து சுதந்திரத்தை மீறியமை குறிப்பிடத்தக்கதாகும்.உதாரணமாக, அரசாங்கத்திற்கு சொந்தமான லேக்ஹவுஸ் நிறுவன சில ஊடகவியலாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் தங்கள் அரசியல் கருத்துக்கள் காரணமாக பாகுபாடுகளுக்கு உட்பட்டு எவ்வித ஆதாரமுமின்றி பொலிஸ் முறைப்பாடுகளுக்கு உட்படுத்தப்பட்டனர்.[26] மேலும், அரசாங்கத்திற்கு சொந்தமான ஊடக நிறுவனங்களின் பல ஊடகவியலாளர்கள் அவர்களின் மாறுபட்ட அரசியல் கருத்தின் காரணமாக சம்பந்தமில்லாத பகுதிகளுக்கு மாற்றப்பட்டுள்ளதை ஆய்வில் ஈடுபட்ட போது ஆய்வாளரினால் கண்டு கொள்ள முடிந்தது.[27] இத்தகைய செயல்கள் கருத்து சுதந்திரத்தின் அடிப்படையில் "ஊடக சுதந்திரத்திற்கு எதிரான நடவடிக்கைகள்" என்று கருதப்படல் வேண்டும்.

## 3.3 பேச்சு சுதந்திரம்

பேச்சு சுதந்திரம் மற்றும் கருத்து தெரிவிக்கும் சுதந்திரம் பல சந்தர்ப்பங்களில் ஒன்றாக விவரிக்கப்பட்டிருந்த போதிலும், குறித்த இரண்டிற்குமிடையே சிறிய வித்தியாசம் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். பேச்சு சுதந்திரம் என்பது எந்தவொரு பேச்சையும் (வாய்வழி அல்லது எழுதப்பட்ட) உருவாக்கும் சுதந்திரமாகும்,மேலும் இது ஒலி தர்க்கம், தர்க்கரீதியான மற்றும் நியாயத்தன்மையால் ஆதரிக்கப்பட வேண்டும்.இலங்கை உட்பட பல சர்வதேச, பிராந்திய மற்றும் உள்நாட்டு செயல்முறைகள் மற்றும் அமைப்புக்கள் இச்சுதந்திரத்தை ஊடக சுதந்திரமாக அங்கீகரிக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.[28]

ஊடக சுதந்திரத்தின் பார்வையில், வலைதள பதிவாளர்கள் மற்றும் மக்கள் அல்லது பிரஜைகள் ஊடகவியலாளர்கள் உட்பட அனைத்து ஊடகவியலாளர்களுக்கும் சம உரிமை உண்டு. 2020 ஆம் ஆண்டில், சில மக்கள் அல்லது பிரஜைகள் ஊடகவியலாளர்கள் சமூக ஊடகங்களில் கருத்து தெரிவித்தமை காரணமாக கைது செய்யப்பட்டமை கவனிக்கத்தக்கதாகும்.[29] எவ்வாறாயினும், தவறான அல்லது பொய்யான தகவல்களை பரப்புவதன் காரணமாக சில கைது நடவடிக்கைகள் நிகழ்ந்தன என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.[30] மாறாக, இத்தகைய குற்றச்சாட்டுகளானது நியாயமான வரையறைகளுக்கு இணங்க வேண்டும் என்பதுடன் அவற்றை விதிப்பது சட்டபூர்வமான மற்றும் அவசியத்தின் தன்மையில் தேர்ச்சி பெற வேண்டும்.[31] இருப்பினும், இதுபோன்ற நடவடிக்கைகள் தொடர்பில் அதிகாரிகள் தமது எல்லைக்கு அப்பால் சென்று கைது நடவடிக்கைகளில் ஈடுபடுதல் மற்றும் அவர்களை சிறையில் தடுத்து வைத்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும், சில தனியார் வானொலி மற்றும் தொலைக்காட்சி நிலையங்களின் ஊடகவியலாளர்கள் தங்களது தொழில்முறை மற்றும் பணி உரிமைகளை கோருவதால் இடைநீக்கம் செய்யப்பட்டு நிறுத்தப்பட்ட பல சம்பவங்கள் அறிக்கையிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.[32] பேச்சு சுதந்திர தலைப்பின் கீழ் ஊடக சுதந்திரத்தை மீறும் நடவடிக்கைகளாக இதுபோன்ற செயல்களைச் குறிப்பிடலாம்.

## 3.4 கருத்து தெரிவிக்கும் சுதந்திரம்

பொதுவாக, கருத்து தெரிவிக்கும் சுதந்திரம் என்பது பரந்த பொருளின் அடிப்படைகாரணமாக ஊடக சுதந்திரம் தொடர்பான உபதலைப்புக்குள் உள்ளடங்கும். எனவே, பேச்சு மற்றும் கருத்து தெரிவிக்கும் சுதந்திரங்களான ஓவியங்கள், புனைகதைகள், கார்ட்டூன்கள், திரைப்படங்கள், நாடகங்கள், மனுக்கள் மற்றும் சங்க செயற்பாடுகள்போன்றவைகள் இதன் கீழ் அடங்கும்.[33] இந்த உரிமைகளானது சர்வதேச மற்றும் உள்நாட்டு அளவில் பரவலாக அங்கீகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும், மேலும் இலங்கையின் அரசியலமைப்பு14 வது பிரிவில் கருத்துச் சுதந்திரத்தையும் அடிப்படை சுதந்திரமாக அங்கீகரித்துள்ளமை கவனிக்கத்தக்கதாகும்.

குறித்த உரிமையானது ஊடக சுதந்திரத்தின் "முதுகெலும்பு" என கருதப்பட்டாலும், 2020 ஆம் ஆண்டில் இலங்கையில் ஊடகவியலாளர்களுக்கு எதிராக பல வகையான மீறல்கள் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.உதாரணமாக, கொவிட் நிவாரண விநியோக செயற்பாட்டின் போது சமத்துவமின்மை குறித்து அறிக்கையிட்டமை தொடர்பாக ஊடகவியலாளர்கள் குழுவொன்றை வெறுக்கத்தக்க பிரசாரங்களுக்கு உள்ளாகியமை கவனிக்கத்தக்கதாகும்.[34] மேலும், பல ஊடகவியலாளர்களின் குடியிருப்பு அல்லது வதிவிடம் மற்றும் அலுவலகங்கள் மீது ஊடகவியல் அறிக்கையிடலில் ஈடுபட்டமை காரணமாக தாக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும்.இத்தகைய மீறல்கள் 2020 ஆம் ஆண்டில் ஒரு போக்காக

அடையாளம் காணப்படலாம், மேலும் இது கருத்துச் தெரிவிக்கும் சுதந்திர தலைப்புகளின் கீழ் ஊடக சுதந்திரத்திற்கு எதிரான செயலாக கருதப்பட வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## 3.5 தகவல் சுதந்திரம்

தகவல் சுதந்திரம் என்பது தகவல்களைத் தேடுவதற்கும் பெறுவதற்கும் திறம்பட வழங்குவதற்கும் உள்ள சுதந்திரம் ஆகும்.[35] இலங்கை அரசியலமைப்பின் 14 (ஏ) பிரிவின் கீழ் குறித்த உரிமையை அடிப்படை உரிமையாக அங்கீகாரம் அளித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும், மேலும் குறித்த சட்டமானது விசேட சட்டமாக இயற்றப்பட்டு தகவல் உரிமையை உறுதிபடுத்துவதும் கவனிக்க வேண்டிய விடயமாகும்.[36]

குறித்த உரிமையானது அறிக்கையிடல் செயல்பாட்டின் போது ஊடகவியலாளர்களின் அடிப்படை உரிமைகளில் பிரதான உரிமையாக கருதப்படுகின்றது.இருப்பினும், 2020 ஆம் ஆண்டில் குறித்த உரிமை தொடர்பாக பல சிக்கல்கள் மற்றும் நிகழ்வுகள் அடையாளம் காணப்பட்டுள்ளமை கவனிக்கத்தக்கதாகும்.அரச பொறுப்பு முயற்சிகள் குழு (COPE) செப்டம்பர் மாதத்தில்இருந்து ஊடகங்கள் பங்குபற்றுவதை தடைசெய்தது.[37] அக்டோபர் 08 ஆம் திகதி, ஊடகவியலாளர் ஒருவரை பிரதேச சபைக் கூட்டத்தில் இருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டமை.[38] மேலும், பல ஊடகவியலாளர்கள் தகவல்கள் சேகரிப்பின் ஈடுபடும் போது நியாயமற்ற நிராகரிப்புகள் மற்றும் அரசாங்க தகவல் அதிகாரிகளின் வேண்டுமென்றே தாமதங்கள் குறித்து புகார் அளிக்கின்றமை கவனிக்கத்தக்கதாகும்.[39] அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தமானது குறித்த உரிமை தொடர்பில் சில எதிர்மறையான தாக்கங்களை உருவாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.முக்கியமாக தகவல் அறியும்உரிமைக்கான ஆணையத்தின் சுயாதீன தன்மையில், அதாவது தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் நியமிப்பதில் ஒரு சார்பு பொறிமுறையை அறிமுகப்படுத்துதல் மற்றும் உறுப்பினர்களை ஜனாதிபதியால் நீக்குவதற்கான அதிகாரம் காணப்படுதல் போன்றவை ஆகும்.[40]

எனவே, தகவல் அறியும் உரிமையின் கீழ் ஊடக சுதந்திரத்திற்கு எதிரான பல சம்பவங்கள் அல்லது பிரச்சினைகள் 2020 ஆம் ஆண்டில் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## 3.6 தகவல் பதிவு செய்வதற்கான சுதந்திரம்

தகவல்பதிவுசெய்யும் சுதந்திரம் என்பது ஊடக சுதந்திரம் தொடர்பில் காணப்படும் அடிப்படை உரிமைகளில் ஒன்றாகும்.ஊடக பதிவுசெய்தல் எனப்படுவது வீடியோ, புகைப்படங்கள், குரல் வழியான பதிவுகள் அல்லது உரையாகவோ தகவல்களை பதிவு செய்துகொள்வதாகும்.[41]

2020 ல் நடந்த சம்பவங்களை கவனிக்கும் போது, பதிவு செய்யும் சுதந்திரத்தை மீறும் பல சம்பவங்கள் நிகழ்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். உதாரணமாக, சில சந்தர்ப்பங்களில், தகவல்களைப் பதிவு செய்ய ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுக்கப்படல்.[42] மேலும், ஊடகவியலாளர்கள் பதிவு செய்ய முற்படும்போது தாக்கப்படுதல்[43], துன்புறுத்தப்படுதல்[44], அச்சுறுத்தல்[45] மற்றும் தடை விதித்தல்[46], மிரட்டப்படுதல் போன்ற செயற்பாடுகள் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இருப்பினும், தகவல்பதிவு செய்வதற்கான உரிமை சட்ட மற்றும் ஒழுக்கவியல் நெறிமுறை கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியம். உதாரணமாக, படங்களை எடுப்பது அல்லது வீடியோ பதிவு செய்வது அனுமதிக்கப்படாத இடங்கள் காணப்படுகின்றன. மேலும்,தகவல் பதிவு மேற்கொள்ளும்போது மக்களின் இரகசிய தன்மையை கருத்தில் கொள்ள வேண்டும். இலங்கையில், 2021 ஆம் ஆண்டில் பல நெறிமுறையற்ற தகவல் பதிவுகள் அறிக்கையிடப்பட்டுள்ளமை கவனிக்கத்தக்கதாகும், முக்கியமாக கொவிட் தொற்றின் காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு எதிரானவையாகும்.[47]

எனவே தகவல் பதிவு செய்யும் சுதந்திரம் முழுமையான வெறும் சுதந்திரம் அல்ல என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியம், மேலும் குறித்த சுதந்திரம் ஆனது பல பொறுப்புகளில் மத்தியில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். அதன்படி,தகவல் பதிவு செய்யும் சுதந்திரத்தைப் பயன்படுத்தும்போது இரு பக்கம் தொடர்பிலும் (அதாவது சுதந்திர உரிமை மற்றும் பொறுப்பு )கவனம் செலுத்தப்பட வேண்டும்.

## 3.7 வெளியீட்டு அல்லது பத்திரிகை சுதந்திரம்

வெளியீட்டு சுதந்திரத்தை "பத்திரிகை சுதந்திரம்" என்ற பரப்பில் சேர்க்க முடியும் என்பதுடன் , மேலும் குறித்த சுதந்திரமானது மற்ற சுதந்திர காரணிகளில் இருந்து வேறுபட்ட வேறு ஒரு தனி காரணியாகவும் அடையாளம் காணப்படலாம்."வெளியீட்டு சுதந்திரம்" என்பது எந்தவகையான புத்தகம், பத்திரிகை அல்லது அத்தகைய வெளியீடுகளை வெளியிடுவதற்கான சுதந்திரம் ஆகும். வெளியீட்டு சுதந்திரமானது தணிக்கை அற்றதும் அரசாங்கத்தினாலையோ அல்லது வேறு நபர்களினாலேயோ கட்டுபாடுகள் விதிக்க முடியாததுமான சுதந்திரம் மற்றும் அதனை விநியோகிப்பதற்காக காணப்படும் சுதந்திரமும் ஆகும்

இலங்கை சூழலில், வெளியீட்டு சுதந்திரம் ஆனது அரசியலமைப்பின் 14 வது பிரிவினால் உறுதி செய்யப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கதாகும். இருப்பினும், சமீபத்தில் குறித்த சுதந்திரத்திற்கு எதிராக சில சம்பவங்கள் பதிவாகியுள்ளமை கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது , திரு கே கே ஸ்ரீநாத் தனது "புதுன்கே ரஸ்தியாதுவ" புத்தகம் தொடர்பாக அவர் மீது முறையீடு

செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.[48] மே 2020 இல், அஹ்னாப் ஜசீம் என்ற இளம் முஸ்லீம் கவிஞர் பயங்கரவாத குற்றச்சாட்டில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். குற்ற புலனாய்வு பிரிவினர்களால் குறித்த கைதுக்கான காரணமாக முன்வைக்கு விடயமாவது குறித்த நபரின் தமிழ் மொழியிலான கவிதை புத்தகம் பயங்கரவாதத்தை போசிக்கும் வகையில் அமைந்துள்ளமை ஆகும் என்பதாகும். இருப்பினும் பல தமிழ் அறிஞர்கள் மற்றும் எழுத்தாளர்கள் அதிகாரிகளின் கூற்றுக்களை மற்றும் முறையீடுகளை முற்றிலுமாக மறுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.[49]

அதன்படி, வெளியீட்டு சுதந்திரத்திற்கு எதிரான குற்றச்சாட்டுகளின் போக்கானது முக்கியமாக மதக் கண்ணோட்டத்தின் அடிப்படையில் உருவாகியுள்ளதை தெளிவாக அடையாளம் காணலாம். சில தீவிரவாத கருத்துக்களை கொண்ட குழுக்கள் மற்றும் அரசாங்கம் சார்ந்த அதிகாரிகளும் வெளியீட்டு சுதந்திரத்தை மட்டுப்படுத்த செயல்படுகின்றனர் என்பதுடன், குறித்த நடவடிக்கை காரணமாக எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் வெளியீட்டாளர்கள் மீது அச்சத்தையும் முன் தணிக்கையையும் செயற்பாடுகளையும் உண்டாக்குகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்..

## 3.8 பத்திரிகை சுதந்திரம்

முன்னதாக, பத்திரிகை சுதந்திரம் தலைப்பில் கிட்டத்தட்ட அனைத்து உரிமைகளையும் உள்ளடக்கி இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.[50] இருப்பினும், தொழில்நுட்பம் மற்றும் சட்டத்தின் புதிய தோற்றத்துடன், உரிமையின் பரப்பானது குறிப்பிடத்தக்க அளவு வளர்ந்துள்ளமை முக்கிய விடயம்.எனவே, பத்திரிகை சுதந்திரத்தில் செய்தித்தாள்கள் தொடர்பான அனைத்து உரிமைகளும் சுதந்திரங்களும் அடங்கும் என்பது கவனிக்கத்தக்கதாகும்.[51] இது ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு, அச்சிடும் மற்றும் விநியோகிப்பதற்கு உள்ள சுதந்திரம், தணிக்கை மற்றும் பத்திரிகை சுதந்திரத்தையும் வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

2020 ஆம் ஆண்டில், இலங்கையில் பத்திரிகை சுதந்திரத்திற்கு எதிராக பல சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. உதாரணமாக, லங்காதீப பத்திரிகையில் பணிபுரியம் பெண் ஊடகவியலாளருக்கு ஒரு தனியார் தரப்பில் இருந்து மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதுடன், குறித்த சம்பவம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டமுறையீடு தொடர்பில் காவல்துறை குறித்த முறையீட்டை கவனத்தில்கொள்ளவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.[52] மேலும், பல அச்சு ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டும், அச்சுறுத்தப்பட்டும் மற்றும் மிரட்டல்களுக்கும் உள்ளாகியுள்ளனர்.[53] குறித்த சம்பவங்களைத் தவிர, அச்சு ஊடகவியலாளர்கள் செய்தி ஆசிரியருக்குரிய சுதந்திரத்தை இழத்தல், அடிப்படை தொழிலாளர் உரிமைகளை மீறுதல், சம்பளக் குறைப்பு மற்றும் கோவிட் 19 க்கு எதிரான பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பின்பற்றாமை போன்ற பல பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளமை கவனிக்கத்தக்கது.[54]

## 3.9 ஒளிபரப்பு சுதந்திரம்

ஒளிபரப்பு சுதந்திரம் எனப்படுவது எல்லைகள்,அரசியல் அல்லது வணிக ரீதியான வரையறைகளை தாண்டி மற்றும் எவ்வித கட்டுப்பாடுகள் இன்றி பொதுமக்களுக்கு பரந்த தகவல்களை தெரியப்படுத்துவதற்காக வானொலி, தொலைக்காட்சி அல்லது வேறு ஊடகங்களில் மூலம்ஒளிபரப்பைமேற்கொள்வதற்கான சுதந்திரம் ஆகும். மேலும், ஒளிபரப்பு செயற்பாடுகளில் உள்ளடக்கம் அரசாங்கத்தால் அல்லது ஒழுங்குமுறை அமைப்புகளால் முன் தணிக்கைக்கு உட்படுத்தப்படக்கூடாது என்பதாகும். உள்ளடக்கம் தொடர்பான ஒழுங்குமுறை விதிகளை மீறுவதற்கான எந்தவொரு அனுமதியும் ஒளிபரப்பப்பட்ட பின்னரே பயன்படுத்தப்பட வேண்டும்.[55]

இலங்கையின் தற்போதைய சூழலில், ஒளிபரப்பு சுதந்திரம் தொடர்பான பல சிக்கல்கள் அல்லது பிரச்சினைகள் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். வானொலி அல்லது தொலைக்காட்சி அலைவரிசைகளை உரிமம் வழங்குதல், அதிர்வெண்களை ஒதுக்குதல் மற்றும் உள்ளடக்கத்தை நெறிமுறைப்படுத்தல் அல்லது ஒழுங்குபடுத்துதல் போன்ற முகாமை நடவடிக்கைகள் தொடர்பில் கட்டுப்பாடுகளை மற்றும் ஒழுங்குமுறை செயற்பாடுகளை மேற்கொள்ள இலங்கையில் எந்தவொரு பொறுப்புக்கூறல் செயல்முறையும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். இதுபோன்ற நடவடிக்கைகள் அனைத்தும் குடிமக்களுக்கானபொறுப்பை விட அரசியல், தனிப்பட்ட அல்லது பொருளாதார நிகழ்ச்சி நிரல்களால் கையாளப்படுகின்றமை கவலைக்குரியதாகும்.[56]

குறித்த பின்னணியில், தகவல் மற்றும் புதிய கருத்துக்களின் அதிகபட்ச பன்முகத்தன்மையைப் பெறுவதற்கான குடிமக்களின் சுதந்திரம் தடைபட்டுள்ளதுடன், மேலும் குறித்த சுதந்திரம் ஆனது பல்வேறு வகையான தடைகளுக்கும் முகம்கொடுக்க நேரிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.அதன்படி, மக்கள் மற்றும் ஊடகவியலாளர்களிடமிருந்து ஒளிபரப்பு சுதந்திரம் பறிக்கப்பட்டுள்ளமை தெளிவாகின்றது. மேலும், ஊடகவியலாளர்கள் சுய தணிக்கை மற்றும் பணிநீக்கங்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளமை கவனிக்கத்தக்கதாகும்.[57]

## 3.10 இணைய சுதந்திரம்

தற்போதுள்ள ஊடக சுதந்திரக் கோட்பாட்டின் முக்கிய கூறுகளில் ஒன்றாக இணைய சுதந்திரம் மாறிவிட்டமை கவனிக்கத்தக்கதாகும். இணைய சுதந்திரமானது அனைவருக்குமான உட்பிரவேசித்தல் உரிமை, அணுகல் சுதந்திரம்மற்றும்எவ்வித தடையும் இன்றி இணைய பயன்பாடு உரிமைபோன்றவை உள்ளடங்கும் என்பதுடன்மேலும்,நிகழ்நிலையில் அல்லது இணைய கருத்துச் சுதந்திரம் தொடர்பான அனைத்து உரிமைகளையும் அனுபவிப்பதை குறித்த இணைய சுதந்திரம் உறுதிப்படுத்துகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.[58]


இலங்கை தற்போது காணப்படும் சூழலில், வலைத்தளம் மற்றும் இணையம் மூலமான கருத்து சுதந்திரமானது ஊடகவியலாளர்களுக்கும் பிரஜைகளுக்கும் சாதகமாக இல்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். நிகழ்நிலை அல்லது இணைய ஊடகவியலாளர்கள் மற்றும் வலைதள பதிவர்கள் தணிக்கை மற்றும் கண்காணிப்பு என்ற பெயரில் தாக்கங்களுக்கு உள்ளாகிய பல நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.[59]

2020 ஆம் ஆண்டில், பல நிகழ்நிலை அல்லது இணைய ஊடகவியலாளர்கள் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டமை கவனிக்கத்தக்கதாகும்.[60] மேலும், ஒரு வலைத்தளம் முடக்கப்பட்டது[61], வெளிநாட்டு ஊடகவியலாளரின் கணினி பறிமுதல் செய்யப்பட்டது.[62] இந்த ஆண்டின் இறுதிக்குள், நிகழ்நிலை அல்லது இணைய மற்றும் சமூக ஊடகங்களை ஒழுங்குபடுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக வெகுசன ஊடக அமைச்சர் தெரிவித்தமை கவனிக்கத்தக்கது.[63] மாறாக, வெறுக்கத்தக்க பேச்சு மற்றும் தவறானஅல்லது பொய்யான தகவல்கள் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்துவதுடன் குறித்த உரிமையை அனுபவிப்பதிலும் உறுதிப்படுத்துவதிலும் பாரிய தாக்கங்களை உண்டாக்குகின்றன.[64] ஆகவே, இலங்கையில் இணையம் தொடர்பான சுதந்திரமானது ஆரோக்கியமானதல்ல என்பது தெளிவாகின்றது.

அதன்படி, இலங்கையில் உள்ள பத்து ஊடக சுதந்திர பகுதிக்கூறுகளும் இந்த ஆண்டில் பல வழிகளில் எதிர்மறையாக பாதிக்கப்பட்டுள்ளன என்பது தெளிவாகத் தெரிகின்றது.தகவல் பதிவு செய்யும் சுதந்திரம், பத்திரிகை சுதந்திரம், இணைய சுதந்திரம் போன்ற சில சுதந்திரங்கள் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளன. இருப்பினும், வெளியீட்டு சுதந்திரம் மற்றும் சிந்தனை சுதந்திரம் போன்ற பிற பகுதி கூறுகள் ஒப்பீட்டளவில் குறைவான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.இருப்பினும், பத்து சுதந்திரங்களின் தாக்கத்தை வெவ்வேறாக பிரித்து பகுப்பாய்வு செய்வது முற்றிலும் சிறந்த முறையல்ல. ஏனெனில் குறித்த பத்து சுதந்திர தலைப்புகளும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்பு கொண்ட சார்ந்த காரணிகளாகும். எனவே, சிறந்த அணுகுமுறையாக கொள்வது அவற்றை ஒன்றாக அளவிடுவது அல்லது பகுப்பாய்வு செய்வதாகும்.

எந்தவொரு ஊடக சுதந்திரக் பகுதி கூறுகளும் இலங்கையில் முழு பாதுகாப்பை கொண்டன அல்ல என்பதைப் புரிந்துகொள்வது சிறந்ததாகும்.

2020 ஆம் ஆண்டில் ஊடக சுதந்திரத்திற்கு எதிரான சம்பவங்களைச் கவனிக்கும்போது, ஊடக சுதந்திரக் (தலைப்புக்களை)பகுதி கூறுகளை எதிர்மறையாக பாதித்த பல்வேறு செயல்களை அடையாளம் காணலாம். மேலும், அரசு மற்றும் தனியார் குழுக்கள் ஊடக சுதந்திரத்திற்கு எதிராக குறிப்பிடத்தக்க அளவு செயல்படுகின்றமை கவனிக்கத்தக்கதாகும். மேலே குறிப்பிட்ட காரணிகளும் அடுத்த அத்தியாயத்தில் ஆழமாக ஆராயப்படுகின்றன. இருப்பினும், கீழேயுள்ள வரைபடம் நடவடிக்கைகள் அல்லது செயல்முறைகள், பகுதி கூறுகளின் தாக்கம் மற்றும் இடைத்தொடர்பு பற்றிய கண்ணோட்டத்தை வழங்குகிறது.



# 4. 2020 ஊடக சுதந்திரத்திற்கு எதிரான பிரிவு வகைகள் மற்றும் செயல்பாடுகள்




காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் தலைவர் பதவிக்கு காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்ட ஒருவரை நியமிப்பது தொடர்பில் தனது கண்டனத்தை தெரிவித்துக்கொள்ளுவதுடன் குறித்த நியமனத்தை ரத்து செய்யுமாறு மனித உரிமை ஆர்வலர் சந்தியா எக்னலிகொட ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார். www.aithiya.lk

2020 ஆம் ஆண்டின் ஊடக சுதந்திரம் தொடர்பான 58 சம்பவங்கள் / நிகழ்வுகளை ஆய்வாளர் பட்டியலிடுகிறார்,குறித்த நிகழ்வுகள் மற்றும் சம்பவங்களானது வெளிப்படையாக காணப்படுவதுடன் வெளிப்டையாக விவாதிக்க பட்டவையாகும்.[65] இந்த பட்டியலில் பிரதான உள்நாட்டு ஊடக சுதந்திர கண்காணிப்பாளர்கள் அறிக்கையிடும் புள்ளிவிவரங்களை விட சம்பவங்களே கருத்தில்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். குறித்த ஆண்டில் நிகழ்ந்த ஊடக சுதந்திரத்திற்கு எதிரான அனைத்து நிகழ்வுகள்,[66] சம்பவங்கள் அல்லது பிரச்சினைளையும் குறித்த ஆய்வானது உள்ளடக்கியது என்று அர்த்தமல்ல. இருப்பினும், குறிகாட்டி ஊடக சுதந்திரம் தொடர்பான தெளிவான காட்சியை வழங்குவதுடன் ஊடக சுதந்திரத்தை மீறும் செயல்களை வகைப்படுத்தவும் உதவுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்,மேலும் சுதந்திரத்திற்கு எதிரான முக்கிய வகிபாகங்களை வகிக்கும் நபர்களை அல்லது குழுக்களை அடையாளம் காட்டுவதுடன் , ஊடக சுதந்திரத்திற்கு எதிரான முகங்கள் அல்லது நடவடிக்கைகள் ஊடக சுதந்திர நிலையை ஆராய குறிகாட்டிகளாகப் பயன்படுத்தப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

கீழேயுள்ள அட்டவணை 2020 ஆம் ஆண்டில் இலங்கையின் ஊடக சுதந்திரத்திற்கு எதிராக நிகழ்ந்த சம்பவங்கள்,நிகழ்வுகள் மற்றும் குறித்த சம்பவங்களுக்கு பொறுப்புகூற வேண்டிய நபர்கள் அல்லது குழுக்கள் அடங்கிய புள்ளிவிவரங்களுடன் விவரிக்கபட்டுள்ளது

அதன்படி, 2020 ஆம் ஆண்டில் இலங்கையின் ஊடக சுதந்திரத்திற்கு எதிரான பிரச்சினைகள் மற்றும் சம்பவங்களை பின்வரும் நான்கு வகைக்குள் அடையாளம் காண முடியும். அவையாவன

1) ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம்
2) சட்ட நிபந்தனைகள்
3) ஊடக சுயாதீனத்தன்மை
4) நிபுணத்துவம் / தொழில் சார்ந்த மனப்பான்மை

தாக்குதல், துன்புறுத்தல் மற்றும் மிரட்டல் போன்ற பல முகங்கள் அல்லது செயல்பாடுகளாக எழும் சிக்கல்களை மேலே உள்ள அட்டவணை விவரிக்கிறது.இருப்பினும், சில சிக்கல்கள் அல்லது சம்பவங்கள் இரண்டு அல்லது மூன்று செயல்களின் ஒன்றிணைப்பாக செயல்படுகின்றன என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். உதாரணமாக, ஒரு தாக்குதல் சம்பவத்தில் அச்சுறுத்தல், துன்புறுத்தல் மற்றும் தடைகள் போன்ற பல நடவடிக்கைகள் அனைத்தும்

### அட்டவணை 02- ஊடக சுதந்திரத்திற்கு எதிரான நிகழ்வுகள். சம்பவங்கள் மற்றும் சிக்கல்கள் 2020

| பிரதான வகை | சம்பவத்தின் தன்மை / செயல்கள் / குறிகாட்டிகள் | பொறுப்புகூற வேண்டிய நபர்கள் |
|---|---|---|
| ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் (33) | தாக்குதல் (07)<br>துன்புறுத்தல் (02)<br>அச்சுறுத்தல் (13)<br>மிரட்டுதல் (04)<br>தடைசெய்தல் நடவடிக்கை (02)<br>உபகரணங்கள் திருடப்பட்டமை (01)<br>தனிப்பட்ட தகவல்களை சேகரித்தல் (01)<br>ஒழுங்கமைக்கப்பட்ட வெறுப்பு பேச்சு (02)<br>ஒழுங்கமைக்கப்பட்ட வேற்றுமை நடவடிக்கை (01) | காவல்துறை<br>இராணுவம்<br>அரச அதிகாரிகள்<br>தீவிரவாத கருத்துக்களை கொண்ட குழுக்கள்<br>அடையாளம் தெரியாத நபர்<br>அரசியல் குழுக்கள் |
| சட்ட நிபந்தனைகள் (20) | கைது (05)<br>அணுகல் மறுப்பு அல்லது பிரவேச மறுப்பு (05)<br>காவல்துறையினரின் கவனையீனம் அல்லது காவல்துறை பொறுப்புகளில் இருந்து விடுபடல் (01)<br>மூலாதாரங்களை கண்டறிய விசாரித்தல் (01)<br>கேள்வி தொடுத்தல் (03)<br>காவல்துறை அழைப்பாணை (01)<br>ஊடக உபகரணங்களை பறிமுதல் செய்தல் (02)<br>ஒரு கட்டுப்பாட்டு/ஒழுங்குமுறை பொறிமுறையை அறிமுகப்படுத்துதல் அல்லது அறிமுகப்படுத்த முயற்சித்தல் (01)<br>வழக்கு தாக்கல் (01) | காவல்துறை<br>அரசாங்கம |
| ஊடகங்களின் சுயாதீனத்துவம் (03) | ஹேக்கிங் / சைபர் தாக்குதலுக்கு உள்ளாதல் (01)<br>வலைத்தளம் முடக்கம் (01)<br>ஒளிபரப்பை நிறுத்துதல் (01) | தீவிர கருத்துக்களை கொண்ட குழுக்கள்<br>அரசாங்கம்<br>ஊடக உரிமையாளர்கள் |
| நிபுணத்துவம்/தொழில் சார்ந்த மனப்பான்மை (02) | சேவையை நிறுத்துதல் (01)<br>ஒழுக்காற்று நடவடிக்கைகள் (01) | ஊடக உரிமையாளர்கள் |

ஒன்றிணைந்த சேர்க்கையாக காணப்படும்.இருப்பினும், குறித்த சம்பவம் அல்லது பிரச்சினை ஒன்றுடன் ஒன்று குறுக்கிடுவதை தடுக்கவும் பிழைகளை குறைத்துகொள்வதற்கும் ஒரு சம்பவத்தை பொறுப்புகூற வேண்டிய நபர்களுடன் இணைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.இதுபோன்ற சந்தர்ப்பங்களில், மிகவும் பொருத்தமான பொறுப்பு கூற வேண்டிய நபர்கள் தேர்ந்தெடுத்து கொள்ளப்படுவர்.

2020 ஆம் ஆண்டிற்கான ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் பகுதி கூறுக்குள் அமையும் ஊடக சுதந்திரத்திற்கு எதிரான நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள் ஆனது மிகவும் பொதுவான வகையாகும்.இந்த பிரிவில் 13 அச்சுறுத்தல்கள், 07 தாக்குதல்கள், 04 மிரட்டல்கள் மற்றும் பல வகையான அத்துமீறல்கள் பதிவாகியுள்ளன.இரண்டாவது மிகவும் பொதுவான பிரிவான சட்ட நிபந்தனைகள் பிரிவின் கீழ் 05 கைதுகள், 05அணுகல் மறுப்பு அல்லது பிரவேச மறுப்பு போன்ற நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். ஊடக




© @Nikshazz Sajith Bandara

சுயாதீனத்துவ பிரிவில் உள்ளடங்கும் ஒரு சைபர் தாக்குதல்,ஒரு வலைத்தளம் முடக்கம் மற்றும் ஒளிபரப்பை நிறுத்துதல் ஆகியவை அடங்கும். நிபுணத்துவம்/தொழில் சார்ந்த மனப்பான்மை பிரிவிற்குள் பின்வரும் சிக்கல்கள் மற்றும் நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன, அவையாவன சேவையை இடை நிறுத்துதல் ,ஒழுக்காற்று நடவடிக்கைகள் ஆகும்.(முழு விவரங்களுக்கு அட்டவணை 02 ஐப் பார்க்கவும்)

ஊடக சுதந்திர பிரச்சினைகளின் அல்லது சம்பவங்களின் வகைப்படுத்தல் மேலும் பின்வருமாறு விவரிக்கப்பட்டுள்ளது:

## விளக்கப்படம் 1-2020 இல் ஊடக சுதந்திரத்திற்கு எதிரான முக்கிய பிரச்சினைகள் / பிரிவுகள்




தற்போதுள்ள ஆவணங்கள் மற்றும் அறிக்கைகள் இலங்கையின் ஊடக சுதந்திரம் மற்றும் ஊடக உரிமை மீறல்களுக்கு எதிரான நான்கு திட்டவட்டமான சிக்கல்களை மற்றும் சம்பவங்களை அடையாளம் காண தகவல்களை வழங்கினாலும் கூட,உள்நாட்டு ஊடக கண்காணிப்பாளர்கள் துல்லியமாக ஆய்வு செய்யப்படாத இன்னும் சில பகுதிகள் இருப்பதை குறித்த ஆய்வை மேற்கொள்ளும் போதுஆய்வாளரினால் அடையாளம் கண்டுகொள்ள முடியுமாக இருந்தது. தனிப்பட்ட அவதானிப்புகள் மற்றும் நடைமுறை தரவுகளின் அடிப்படையில் ஆழ்ந்த நேர்காணல்களால் சேகரிக்கப்பட்டு தெரிந்து கொண்ட விடயமாவது,கட்டமைப்பு சிக்கல்கள், பங்கேற்பு மற்றும் ஊடக தயாரிப்புகளின்/வெளியீடுகளின் பன்முகத்தன்மைமற்றும் தரம்ஆகியவை கண்காணிக்கப்படவில்லை என்பதுடன் விரிவாக அடையாளம் காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கை சூழலில், ஊடக கட்டமைப்பு குறித்து எந்த விதமான சட்டங்கள் மற்றும் கொள்கைகளோ இல்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.எனவே, அச்சு, வானொலி, தொலைக்காட்சி மற்றும் ஆன்லைன் உள்ளிட்ட அனைத்து ஊடக வகைகளையும் ஒழுங்கமைத்து செயற்படுத்துவதற்கான அதிகாரம் மற்றும் இயலுமை ஊடக உரிமையாளர்களுக்கு காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். ஒளிபரப்பு ஸ்பெக்ட்ரம்(கதிர்நிரல்)உரிய முறையில் விநியோகிக்க முறையான அணுகுமுறை இல்லை.அதைத் தொடர்ந்து, ஊடக பன்மைத்துவம், ஊடக உரிமை, தயாரிப்புகளின் சுயாதீனத்துவம் மற்றும் பொது சேவை ஒளிபரப்பு ஆகியவை ஊடக சுதந்திரத்திற்கு எதிரான பிரச்சினைகளாக மாறியுள்ளன. இத்தகைய விடயங்கள், முதன்மையாக ஒளிபரப்பு ஊடகங்கள் தொடர்பாக காணப்படும் பிரச்சினைகள், ஊடக சுதந்திர கண்காணிப்பு மற்றும் அவற்றின் குறிகாட்டிகளால் போதுமான அளவில் கவனத்தில்கொள்ளப்படுவதில்லை.

ஊடகம் தொடர்பில் அக்கறை கொண்டவர்களாக சமூகத்தில் உள்ள அனைவரும் உள்ளடக்கப்பட வேண்டும்.இன்னும் துல்லியமாக விவரிப்பதாயின், ஊடகத் துறையில் பிரதிநிதித்துவமாக அனைத்து பாலினங்கள், மதங்கள், இனங்கள் மற்றும் பிற குழுக்களை நியாயமான முறையில்உள்ளடக்கப்பட வேண்டும். இது பரந்த அளவிலான சிந்தனை சுதந்திரம், கருத்து சுதந்திரம், கருத்து தெரிவிக்கும் சுதந்திரத்தின் ஊடாக இறுதியில் ஊடக சுதந்திரத்தை உறுதி செய்யும்.ஆய்வாளரின் கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் ,ஊடக சுதந்திரத்தை பாதுப்பதற்கான போதியளவிலான கொள்கைகள், சட்டங்கள் மற்றும் நடைமுறைகள் காணப்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். ஊடக கண்காணிப்பாளர்கள் மற்றும் குறிகாட்டிகள் இந்த விடயம் தொடர்பில் கணிசமாக செயல்படுவதில்லை என்பது கவனிக்கத்தக்கதாகும்.

ஊடக சுதந்திரத்தை மேம்படுத்துவதற்கு ஊடக உருவாக்கங்களின் பன்முகத்தன்மையும் தரமும் உயர்ந்த தரத்தில் இருக்க வேண்டும்.உதாரணமாக, அனைத்து சமூகங்களுடனும் தொடர்புடைய அனைத்து மனித உரிமை பிரச்சினைகளையும் ஊடகங்கள் உள்ளடக்க வேண்டும்.மேலும், ஊடக சுதந்திர உள்ளடக்கத்தில் அனைத்து அக்கறையுடைய பங்குதாரர்களின் குரல்களும் இருக்க வேண்டும், மேலும் தவறான தகவல் மற்றும் வெறுக்கத்தக்க பேச்சால் களங்கப்படுத்த கூடாது. இலங்கை சூழ்நிலையில் பல சிக்கல்கள் இருப்பதைக் அடையாளம் காணலாம். கோவிட் -19 தொற்று தொடர்பான தவறான தகவல் மற்றும் வெறுப்பு பேச்சுகள் 2020 ஆம் ஆண்டில் இலங்கை ஊடகங்களுக்குள் ஒரு முக்கியமான



சண்டே அப்சர்வரின் முன்னாள் ஆசிரியரும் நியூயார்க் டைம்ஸின் நிருபருமான தரிஷா பாஸ்டின் துன்புறுத்தப்படுவதை நிறுத்துமாறு ஐந்து சர்வதேச மனித உரிமை அமைப்புகள் இலங்கை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளன. www.newswire.lk

விடயமாகும்.ஆய்வாளரின் அவதானிப்பின்படி, ஊடக கண்காணிப்பாளர்களும் அவற்றின் குறிகாட்டிகளும் ஊடக சுதந்திரத்திற்கு எதிரான மேலே குறிப்பிட்ட அச்சுறுத்தல்களை அடையாளம் கண்டு அளவிடுவதற்கான ஒரு சிறந்த அணுகுமுறையை பின்பற்றவில்லை என்பதாகும்.

கண்காணிப்பாளர்களும் குறிகாட்டிகளும் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம்,சட்ட நிலைமைகள், ஊடகங்களின் சுயாதீனத்துவம் மற்றும் நிபுணத்துவம் தொடர்பான பல சிக்கல்களை ஆராய்ந்து விவரித்த போதிலும்,அவை மேலும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்.

ஆராய்ச்சியாளரின் முடிவுகளின் அடிப்படையில், ஊடகவியலாளர்களுக்கு எதிராக காவல்துறை, பாதுகாப்புப் படையினர் மற்றும் பிற அரசாங்க அதிகாரிகளால் பாரிய கண்காணிப்பு அடக்குமுறைகள் மேற்கொள்ளப்படுகிறமை தெளிவாகின்றது.[67] இந்த செயல்முறை ஊடகவியலாளர்களின்இரகசியத்தன்மை / தனியார் இறைமை உரிமையை மீறுவதுடன் மற்றும் சிந்தனை மற்றும் கருத்து உரிமை போன்ற அடிப்படை மனித உரிமைகளை மோசமாக பாதிக்கின்றன.ஆகவே, ஊடகவியலாளர்கள் தொடர்பில் கண்காணித்தல் நடவடிக்கையானது ஊடக உரிமை மீறல்களின் ஒரு அம்சமாகப் பார்க்க வேண்டும் மற்றும் அவற்றை அளவிட துணை குறிகாட்டிகளை பயன்படுத்த வேண்டும்.

குறித்த ஆண்டின்ஊடகமீறல்பிரச்சினைகளில்பிரதான ஒன்றாக சட்ட நிபந்தனைகள் சிக்கல் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.கண்காணிப்பு நடவடிக்கையானது குறித்த குறிகாட்டிகளால் பல தலைப்புகளையும் உள்ளடக்கியுள்ளன.இருப்பினும், ஆராய்ச்சியாளர் கவனித்ததன்படி, தண்டனைவிலக்குதொடர்பில் அதிக குறிகாட்டிகள் காணப்பட வேண்டும்.உதாரணமாக, ஊடக சுதந்திரம் தொடர்பான சில வழக்குகள், லசந்த விக்ரமதுங்கவின் கொலை மற்றும் பிரகீத் எக்னலியாகொட காணாமல் போனமை உள்ளிட்ட வழக்குகள் விசாரிக்கப்பட்டுள்ளமை.இருப்பினும்,வழக்கு விசாரணை மற்றும் மேலதிக விசாரணையின் செயல்முறைகள் பல அச்சுறுத்தல்கள் காரணமாக வேண்டுமென்றே தாமதங்களுக்கும் உட்பட்டவையாகும். ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களுக்கு தண்டனை வழங்குவதில் அரசியலமைப்பில் 20 வது திருத்தத்தின் தாக்கம் உன்னிப்பாக கண்காணிக்கப்பட வேண்டும்.ஆகவே, ஆண்டுதோறும் ஊடக அறிக்கைகளை வெளியிடுவதையும் நினைவு நிகழ்வுகளை நடத்துவதையும் விட புதிய கருவிகளைக் கொண்டதான நடவடிக்கையாக இருக்க வேண்டும்.பொய்யான குற்றச்சாட்டுகளைச் செய்தால், தேவையற்ற சம்மன்களை வெளியிடுதல், ஊடகவியலாளர்களை நியாயமற்ற முறையில் கேள்வி கேட்டல் போன்ற செயற்பாடுகள் தொடர்பில் ஊடகக் சுதந்திரத்தை பல்வேறு கண்ணோட்டத்தில் கவனமாக ஆராய வேண்டும். இத்தகைய நடவடிக்கைகள் ஊடகவியலாளர்களிடையே தேவையற்ற அச்சத்தை உருவாக்குகின்றன, மேலும் அவர்கள் தொழிலை விட்டு வெளியேறவும் வழிவகுக்கும்.

